(இ) முன் அனுமதியின்றி பிரச்சினை எழுப்புதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, நீங்கள் அதுபற்றி எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. அறிவிப்புக் கொடுக்காமல் எதையும் எழுப்ப முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) மீனவர் பிரச்சினையை எடுத்திருக்கிறேன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசட்டும் (குறுக்கீடு) நீங்கள் ஏதாவது கொடுத்தீர்களா? எந்த அறிவிப்பும் கொடுக்காமல் இப்படி எழுந்து நின்று பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அதற்கு அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) விதிமுறைகள் இருக்கின்றன, உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் அவர்களை மீனவர் பிரச்சினையை எழுப்ப அனுமதித்து இருக்கிறேன், அவர் பேசட்டும், உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. தம்புசாமி, நீங்கள் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுக்கவில்லையென்றால் பின்னர் எப்படி எழுப்ப முடியும்? (குறுக்கீடு) திடீரென்று கேட்டால் எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடு) இல்லை, நீங்கள் எத்தனை மணிக்குக் கொடுத்தீர்கள்? (குறுக்கீடு) 9.45-க்கு கொடுத்தீர்கள். (குறுக்கீடு) 9.37-க்கு என்னிடத்தில் சொன்னீர்கள், 9.45-க்குக் கொடுத்தீர்கள். அதை பின்னர்தான் எடுத்துக் கொள்ள முடியும். (குறுக்கீடு) விதிகளைப் படித்துப் பாருங்கள். நீங்கள் 9.45-க்குக் கொடுத்துவிட்டுக் கேட்பது சரியல்ல. நீங்கள் முறையாக அறிவிப்புக் கொடுத்துவிட்டுத்தான் கேட்கவேண்டும். (குறுக்கீடு) முறையான அறிவிப்புக் கொடுக்காமல் என்னை வந்து வற்புறுத்துவது சரியல்ல. (குறுக்கீடு) 3 பேரும் உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-45

அறிவிப்புக் கொடுக்காமலேயே நீங்கள் மூன்றுபேரும் இதுபோல் பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது சரியல்ல (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதி இப்படிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் முறையாக அறிவிப்புக் கொடுத்திருந்தீர்களேயானால் பதில் சொல்வார்கள், உட்காரவேண்டும் (குறுக்கீடுகள்) கடைசி நாளில் முறைகேடாக நடப்பது சரியல்ல.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடாக நடக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.பழனிசாமி, திரு இளம்வழுதி, இரண்டு பேர்களும் உட்காருங்கள். முறைகேடு இல்லை என்று சொல்லுகிறீர்கள், என்ன முறையாக நடக்கிறீர்கள்? அறிவிப்புகள் கொடுக்காமலேயே நீங்கள் இரண்டுபேரும் நிற்கின்றீர்கள் (குறுக்கீடுகள்)

அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் 9.45 மணிக்குப் பின்னர் வந்து கொடுத்திருக்கிறார். 9.30 மணிக்கு முன்னாலேயே கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை இன்றே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்தால் எப்படி? நான் பதில் பெற்றுத்தான் உங்களுக்கு அனுப்பி வைப்பேன். மூவரும் உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் மீனவர் பிரச்சினை குறித்துப் பேசுங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) நாகப்பட்டினம் கடல் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது குறித்து—தொடர்ச்சி.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் கீச்சாங்குப்பத்தைச் சேர்ந்த வேலாயுதம், நாகராஜன் கனகரத்தினம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் அறிவிப்பிலே என்ன கொடுத்திருக்கிறீர்கள்? 20-2-1996 அன்று வேதாரண்யம் கடல் பகுதியில் என்று கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இது உங்கள் கையெழுத்துதானே?

திரு.எஸ். டேனியல்ராஜ்: ஆமாம். நடந்தது நாகப்பட்டினத்தில்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உங்களுடைய கையெழுத்து, உங்களுடைய கடிதம், டைப் செய்யப்பட்டதுகூட இல்லை. திருத்திக்கொள்கிறேன் என்றாவது சொல்லுங்கள். திரு. இராஜேந்திரன் வேதாரண்யம் பகுதியில் ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்லுகிறார்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் என்பதை நாகப்பட்டினம் என்று திருத்திக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் கீச்சாங்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள், வேலாயுதம்,நாகராஜ், கனகரத்தினம், லோகநாதன், தாம்புரெட்டி, திருவோணம் ஆகிய 6 பேரும் 21-ஆம் தேதி தோப்புத்துறைக்குத் தென் கிழக்கே 15 கிலோ மீட்டர் தூரத்தில் தங்கள் வலைகளை விரித்து மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த ஒரு படகு திடீரென்று அங்கு வந்து இவர்கள் படகை நோக்கிச் சுட்டதில், துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 6 மீனவர்களும் படகுக்குக் கீழே பதுங்கியிருந்தால் தப்பித்துக் கொண்டார்கள்—ஆனால் படகின் மேல்புறம் கிட்டத்தட்ட சல்லடை போன்று துளைக்கப்பட்டுவிட்டது.